[1968 பிப்ரவரி 15

தஞ்சை மருத்துவக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு

* 44 வின.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மருத்துவக் கல்லூரியில் Post-Graduate course ஏற்படுத்தும் திட்டம் எவ்வளவு காலமாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது ?

(இ) எப்போது அத் திட்டம் செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) தஞ்சை மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ்-க்கு மேற்பட்ட படிப்பு ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதும் அரசினர் கவனத்தில் தற்சமயம் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. சுவாமிநாதன் : அடுத்த ஆண்டாவது இது பற்றிப் பரிசீலிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தற்சமயம் உத்தேசம் இல்லை.

பழைய மாம்பலம் ஏரிக்கரை சாலை

* 45 வின.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை, பழைய மாம்பலம் ஏரிக்கரை ரோடை அகலப் படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : இது பற்றி அடுத்த ஆண்டாவது பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏரிக்கரைப் பாதையை அகலப்படுத்தும் பொறுப்பு மாநகராட்சியினுடையது. அவர்களைக் கேட்டபோது அந்த மாதிரித் திட்டம் எதுவும் இல்லையென்று அறிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பழைய மாம்பலம் ஏரிக்கரை ரோடைப் பற்றிய துணை வினா ஒன்றை மாண்புமிகு திரு. விநயகம் அவர்கள் கேட்பார்கள்.

திரு. கே. விநயகம் : பழைய மாம்பலம் ஏரிக்கரை ரோடு என்னுடைய கான்ஸ்டிடுவன்சியைச் சேர்ந்தது. முன்பு அந்த ஏரிக்கரை ரோடில் அரசுப் பொறுப்பில் இருக்கும் பேருந்து வண்டிகளும் போகின்றன. ஒன்று போக இன்னொன்று வர அதற்கு வேண்டிய அளவுக்கு பாதை அகலமாக இல்லை. அதனால்